www.tamilarangam.net



"தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில்
முன்னின்று உழைத்து மரணித்துப்போன
போராளிகளுக்கு இது சமர்ப்பணம் "

VADU இதழ் - 2 யூலை - 2007

தொடர்புகட்கு:-
MR.THEVATHASAN
4,PLACE ROGER SALENGRO
95140 GARGES LES GONESSE
France
( E-MAIL:-VADU.WORLD@hotmail.fr )

நன்கொடை 1ஈரோ
சந்தா வருடம் 15-ஈரோக்கள்
தபாற்செலவு உட்பட

எமது வாசகாகளுக்கு வணக்கங்களுடன்.

**'வடுவின்'** இரண்டாவது இதழிது. எமது முதலாவது இதழ் வெளியாகி சுமார் ஒரு மாதம் கடந்துள்ளது. எமது வெளியீடுபற்றி இதுவரை வந்தடைந்துள்ள விமர்சனங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

'வடுவின்' பிரசவமும் அதில் வெளிவந்த கருத்துக்களும் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது எனக் கூறிவிட முடியாது. இருப்பினும் அதிகம் கவனம் பெற்றுள்ளது. ஏனெனில் 'வடு' இதழுக்கான ஆதரவு கிடைத்த அதே அளவிற்கு நேர்மறை விமர்சனங்களும், எதிர்ப்பலைகளும் கூடவே 'வடுவை' நோக்கித் திரும்பியுள்ளது. ஆதரவு தெரிவித்தவர்கள் போலன்றி எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் நேரடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவில்லை. மூன்றாம் நபர்கள் ஊடாகவும், வதந்திகள், கிசு கிசுப்புகள் மூலமாகவும் அவற்றை அறிந்து கொள்ள முடிந்தது. எதிர்விமர்சனங்களைக் கொண்டுள்ளவர்கள் எழுத்து மூலமாக தமது விமர்சனங்களை இதுவரை பதிவு செய்யவில்லை. அது சாத்தியமாகும் பட்சத்தில் அதற்கு பதிலளிக்கவும், அல்லது அதையொட்டிய விமர்சனங்களையும் ஆரோக்கியமான வழியில் முன்னெடுத்துச் செல்லவும் தயாராயுள்ளோம்.

இவை ஒரு புறம் இருக்க 'வடுவின்' வருகையை வரவேற்று பலர் எம்முடன் தொடர்பு கொண்டார்கள். ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்தும், மற்றும் கனடா, அவுஸ்ரேலியா உட்பட இலங்கை இந்தியாவிலிருந்தும் கூட எமது முயற்சிக்கு பலத்த வரேவேற்பு கிடைத்துள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

பொதுவான வாசகர் பரப்பைத் தாண்டி கல்விமான்கள், எழுத்துத்துறையில் அனுபவம் வாய்ந்தவர்கள், தமிழ்த்தேசியத்தில் தீவிர நம்பிக்கை கொண்டு உழைப்பவர்களென பல தரப்பட்டவர்களும் 'வடு' முன்னெடுக்க முனைந்திருக்கும் வேலைத்திட்டத்தின் அவசியத்தை ஏற்றுக் கொண்டு வரவேற்றனர்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் களம் கண்ட பல மூத்த அனுபவஸ்தர்கள் கூட எம்மிடம் தொடர்பு கொண்டதானது எம்மை மேலும் உட்சாகப் படுத்தியுள்ளது. அந்த வகையில் எமது சமூகத்தின் மேம்பாட்டிற்குகந்த பணிகளை மேற்கொள்ளும் எமது முயற்சிகளுக்கு உங்கள் ஆதரவையும், ஆலோசனைகளையும் வேண்டி நிற்கின்றோம்.


« தென்னை, பனைகளின் தோப்பு, பச்சை வயல்களின் எல்லையும், கோவில்களும், வழுக்கை ஆறும், இந்து, கிறிஸ்தவ பாடசாலைகளையும் (ஆங்கில தமிழ் பாடசாலைகள்) பல சமூகத்தவர்களையும் கொண்ட இருபாட்டி மண்ணைக் கொண்ட அழகிய கிராமம் சண்டிலிப்பாய் » எனத் தொடங்கி. 'தலித்துக்களும் இடதுசாரிகளும்' 'தலித் சமூகத்தின் ஒற்றுமையும் தமிழ்த் தலைமைகளின் தகிடு தாளங்களும்' 'போலிஸ் என்னை சாதி சொல்லி பேசினான்' 'தலித் சமூகத்தின் இனிய நண்பன் வினோதன்' போன்ற இன்னும் பிற தலைப்புக்களுடன் தனது தலித் சமூகத்தின் அனுபங்களையும், அச்சமூகங்களின் வாழ்வியல் துன்பங்களையும் தொடர்ச்சியாக எழுதி வரும் (தொடர் ப.8)

**இது மாதமொருமுறை வெளியாகும் ஏடு**

www.tamilarangam.net



# அறியாயம்...
# அட்டூழியம்...



=அசுரா=

மனிதனின் ஆரம்ப தோற்றமும், அவ்வாரம்ப மனித இனத்தின் மூளைக்கும் உள்ள பகுத்தறியும் குறைபாடே இயற்கையைக் கண்டு அஞ்சவும், இயற்கையை வணங்கவுமான நிர்ப்பந்தம் நிலவியது. இதன் காரணமாகவே மனிதன் தனது வாழ்வின் எதிர்காலத்தையும் அறிய மிக ஆவலானான். தனது வாழ்வானது எப்படியிருக்கும்! நான் எவ்வளவு காலம் உயிரோடு இருப்பேன்! எதிர்காலத்தில நான் வசதியாக வாழ்வேனா, நான் வெளிநாடு போவேனா, எனக்கு நல்ல மனைவியோ–கணவனோ கிடைப்பார்களா? எனும் ஆவல் மேலோங்கியது. இவைபோன்ற முன்னறியும் தேவைக்கான தொழுகொம்புதான் சாத்திரம், சம்பிரதாயம், சாதகம், கடவுள் போன்றவைகளின் தோற்றத்திற்கும் காரணமாக அமைந்தது.

இந்தக் கடவுளின் தேவையானது உலகில் வாழும் மனித குலம் அனைத்துக்கும் தேவையான ஒன்றாக அமைந்தது. இன்றைய நாகரீக வளர்ச்சியானது மனிதனின் செயல்பாடுகளின் காரணமாகவே வளர்ச்சியுற்ற நிலையில் உள்ளது. இருப்பினும் இவ்வளர்ச்சிக்கு காரணமான மனித நிபுணர்களுக்குக் கூட அவசியமான ஒன்றாகவும் உள்ளது...; ‘கடவுள்’

*நாம் இன்று பல வழிகளிலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் சிதறிப் பரவி வாழ்கின்ற வாய்ப்புகள் உள்ளபோதும். அந்நாடுகளின் சமூகப் பண்பாட்டு கலாச் சாரங்களை நாம் எத்தனை பேர் அறிந்திருக்கின்றோம். அல்லது அறிய முற்பட்டிருக்கிறோம் என்றால் 99வீதம் இல்லை என்றே கூறலாம். இன்று மேற்குலக கத்தோலிக்க மதப் பண்பாட்டில் நம்பிக்கை கொண்ட சமூகங்களில் பர பரப்புச் செய்தியாக உள்ளது 777 என்னும் இலக்கங்களின் மகத்துவம் பற்றியதாக. அதாவது 7 ஆம் திகதி, 7 ஆம் மாதம், 2007ஆம் ஆண்டு. இதன் சுருக்கமே 777 என்பதாகும். இந்த நாளில் நடைபெறும் சம்பவங்கள் யாவும் மகத்துவமானதாக அமையும் என்றும், நற்பேறு கிடைக்கும் எனும் பகுதறிவற்ற மூட நம்பிக்கையாகவும் உள்ளது.*

*பிரான்சிலுள்ள பல நகரசபைகளில் இத்திகதியில் திருமணங்கள் நடைபெற உள்ளதற்கு காரணமாக உள்ளதும் இந்த ‘777’ எனும் அதிஸ்டமான, புனித எண்களே காரணமாகும்.*

*கடந்த வருடம் 666 (6 ஆம் திகதி, 06 ஆம் மாதம், 2006ஆம் திகதி) எனும் இலக்கங்கள் ஹொலிவூட் திரைப்படத் துறையினரால் பிரபலப்படுத்தப்பட்டது. இக்காலமானது கடவுளின் அருள்பாலிக்கும் தினமாக கற்பிதப் படுத்தப்படடது. கற்கால மனித சமூகங்களால் உருவாக்கப்பட்ட கற்பிதமான நம்பிக்கைக் குறியீடுகளே இன்று இந்த 777 எனும் இலக்கங்களின் புனித சக்தி எனும் நம்பிக்கைக்கும் காரணமாக உள்ளது.*

*முதலாவது யூத விவிலியத்தில் ஆறுநாட்கள் கடவுள் உலகத்தைப் படைத்து ஏழாம் நாள் கடவுள் ஓய்வு எடுத்துக்கொண்டதால்..; அது ஒரு ‘ஏழு’. மத்தியகால ஆன்மிக வாதிகள் பிரபஞ்ச உடன்பாட்டு உறவுகளை, மூன்று வானம், நான்கு நிலம் எனக் கருதினார்கள் எனவே அதன் கூட்டுத்தொகையும் ‘ஏழு’. கற்கால மனித இனத்தின் எழுத்து வடிவங்களை மொழி பெயர்ப்பு செய்த 7ஆம் நூற்றுண்டு கால* ***SCOLATIQUE*** *நிபுணர்கள் ( கற்களில் எழுதப்பட்டிருந்த எழுத்து வடிவங்களை மொழிபெயர்ப்பு செய்த ஆன்மிக தத்துவவாதிகள் அதில் பிரபல்யமிக்கவர்களா இருந்தவர்கள் -* ***SCOT ERILIEN, SAIN THOMAS, D’QUIN DUNS SCOT, ROYMOND LULLE.*** *போன்றவர்களாகும் ) உணர்வுகள் ஏழாகவும், ஜேசுவின் ஏழு வாக்கியங்கள் சிலுவை வடிவத்தில் இருந்ததாகவும் கருதினார்கள். எனவே அதுவும்‘ஏழு’எனும் புனித இலக்கமாக கருதப்பட்டது. இவ்வாறான கற்களில்பொறிக்கப்பட்டிருந்த வாக்கியங்களை கடவுளின் அருள் வாக்குகள் எனவும் நம்பச் செய்தனர். இதன்படியே ஏழு நபர்களை முன்மொழிந்தார்கள் அதில் நேரடியாக மக்கள் மத்தியிலிருந்து 4 மத வழியில் முதன்மையானவர்களையும் 3 நபர்கள் கடவுளின் நேரடி அவதாரங்களாக அனுப்பப்பட்டவர்களாகவும் கருதினார்கள். ( இதிலிருந்துதான் வத்திக்கான் கத்தோலிக்க சபைத்தேர்வுகள் தோன்றியிருக்கலாம்) எனவே அதுவும் ‘ஏழு’ எனும் புனித இலக்கமாக கருதப்பட்டது. இவ்வாறான ‘ஏழு’ இலக்கக் குறியீடுகளின் மரபுவழி நம்பிக்கைகளே சமூகப்பிரஜைகளை பகுத்தறிவுக்குள் நுழையத் தடையாக உள்ள காரணிகளாகும்.*

*இவ்வாறான சொல்லிலக்கண வாதிகளாலும்* ***(étymologie)*** *ஆன்மிக உணர்வுப்* ***(psychés)*** *பாதிப்புகளாலும் மனிதனின் மறு பிறப்பு நம்பிக்கையும் உருவாக்கப்பட்டது. இதற்கு அவர்களுக்கு பிரதான நம்பிக்கையை ஏற்படுத்திய சம்பவமாக அமைந்தது சூரியனின் மேற்குத் திசை நோக்கிய மறைவும் மீண்டும் கிழக்கில் இருந்து உதிக்கும் தோற்றமுமே, அவர்களின் மறு பிறப்பின் நம்பிக்கைக்கு காரணமாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாகவே இறந்த மனிதர்களின் தலையை கிழக்கு நோக்கி புதைக்கும் வழக்கமும் நிலவி வந்தது.*

www.tamilarangam.net


***மனித இனம் பற்றிய கருத்தியல் தீர்மான மாங்களை வரையறை செய்தவர்கள் மத்தியில் பலரின் கருத்தானது மிருகங்களுக்கு மட்டுமே ஒன்றை குறியீடுகளாக ( காட்சியை, சம்பவத்தை ) பார்க்கும் உணர்வு உள்ளதாகவும், மனிதனுக்கு இருக்கக்கூடிய மிகச் சிறப்பு வாய்ந்த உன்னத உணர்வான பகுத்தறியும் தன்மையை இன்றுவரை சமூகம் புறக்கணித்தே வருகிறது என உறிதிப்படுத்தியுள்ளனர்.***

***(அடிப்படைத் தகவல் பெற்ற இடம்→ le monde des religions juillet- aout 2007 no 24. l'éditorial. Mr. FREDERIC LENOIR.)***

இவ்வாறான நடைமுறைகளால் மனிதர்களுக்கு பல கடவுள்களும், வெவ்வேறான பண்பாடுகளும் கலாச்சாரங்களும் இருக்கலாம். ஆனால் பிற கடவுள்களெல்லாம் மனிதர்களை சமமாகவும், உன்னைப்போல் பிறரையும் நேசி என்கின்ற அருள் வாக்குள் கொடுத்துள்ளதாக பிற மத நூல்களிலும் நாம் அறியக் கூடியதாக இருக்கிறது. அத்துடன் மனிதர்கள் பூலோகத்தில் புரியும் பாவ-புண்ணியங்களுக்கு ஏற்ப இறந்த பிற்பாடே சொர்க்கம், நரகமென்ற உறிதிமொழிகளையும் அந்நூல்கள் கூறுகின்றன.

ஆனால் உலகத்திலேயே பாவப்பட ஜென்மங்களாக, வாழும்போதே, படைத்த எமது கடவுளாலேயே தீண்டப்படாத இழிசனராக ஒதுக்கிய காருண்யமூர்த்திக் கடவுள்களென்றால் அது எமது இந்துமதக் கடவுள்கள்தான். இந்தப்பேறும் பாக்கியமும் பிற எந்தக் கடவுள்கள் மூலமாகவும் பெற்றிடமுடியாது!!! தன்னை வணங்குபவர்களில் ஒரு பகுதியினரை மட்டும் வெளியில் நிற்கவைத்து தன்னை வணங்கும்படி அருள்பாலித்த கடவுள்களும் எமது இந்துக் கடவுள்களாகவே இருக்கின்றனர். இவைபற்றிய இந்து மத வரலாறுகளையும் அதன் உபநிடத, மனுதர்ம நீதி போதனைகளையும் அதன் 'சனாதன'க் ( பரம்பரையாக வழிவந்த நன்னடைத்தகளின் கட்டுப்பாடுகள்) கதை யாடல்களையும் எமது இந்துப் புராணங்களில் நாம் காணலாம்.

இந்துப் பிரஜை ஒருவன் இந்துப் புராணங்களையோ, பகவத் கீதையின் 18 அத்தியாயங்களையோ கற்றுத் தெரிந்து கொள்ளாமலேயே அவைகளின் நியதிக்கேற்ப வாழ்கிறான், செயல் படுகிறான் எனில் அது எவ்வாறு சாத்தியமானது? அதுதான் 'சனாதனம்'. 'சனாதனம்' என்பது பிராமணர்கள் மட்டுமே கடைபிடிக்கும் நெறிகளல்ல. ஒவ்வொரு இந்துப் பிரஜையும் தன்னை அறியாமலும். சனாதனக் கோட்பாடுகள் புரியாமலும் அதன் சாராம்சத்திலேயே வாழ்கிறான். தன்னால் உயர் குலத்தவர்களாகவும் சமூக உரிமைகளுக்குரிய அனைத்துக்குமான முன்னுரிமை வழங்கபெறும் தகுதியுடையவர்களாகவும் படைக்கப்பட்டவர்கள் 'சனாதன' பாரம்பரியங்களை பின்பற்று கிறார்களெனில் அதில் நியாம் உண்டு, தலித்துக்களாக வாழும் நாமும் சனாதனிகளாக வாழ்வதா?

எமது பல்லாயிரமான இந்துக் கடவுள்களில் ஒரு-வரான நடராஜப் பெருமான் எனும் கடவுள் எமது தலித் சமூகப் பிரஜயான ஒருவரை எவ்வாறு அவமதித்தார் எனும் புராணக் கதை ஒன்றை உங்கள் கவனத்திற்காக தருகிறேன்.

## கடவுளும் தீண்ட மறுத்த நந்தனார் கதை

நந்தனாரைப் பற்றி இந்து மதம் கூறும் கதைகளை பலர் அறிந்திருப்பர். நந்தனார் ஆதித்திராவிடச் சமூகத்தைச் சேர்ந்தவர். அவர் சிவபக்தியில் பிராம-ணர்களை விடவும் மிஞ்சியவர். அதுமட்டுமன்றி நற்குணம் கொண்டவராகவும் வாழ்ந்து வந்ததை இந்து மதக்கதைகளே நிரூபித்தும் வந்துள்ளது. ஆனால் இப்படிப்பட்ட சிவபக்தரான நந்தனார், அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒரு-வராகவும் இந்து மதப் புராணங்கள் கூறுகின்றன.

நந்தனார் திருப்புன்கூர் என்னும் ஊரிலுள்ள நடராஜப் பெருமானை தரிசிக்க வேண்டும் என்று ஆவல் கொண்டு ஒவ்வொரு நாளும் முயன்றிருக்கிறார். ஆனால் முடியவில்லை. காரணம் அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. அனுமதி மறுக்கப்பட்ட போதும் சிவத்தொண்டுகள் செய்வதையும், சிவத்தலங்களைத் தரிசிப்பதையுமே தன் வாழ்வின் குறிக்கோளாகவும் கொண்டவர். நாளை செல்வோம். இறைவனைக் காண்போம் என்று ஒவ்வொரு நாளும் தன்மனதைத் தேற்றிக் கொண்டார். அதன் காரணமா-கவே அவர் 'திருநாளைப் போவார்' எனக் காரணப் பெயரும் பெற்றார். சிவனைக் காண்பதே தன் பிறவிப் பேறு என்று எண்ணி, நடராஜனைத் தரிசிக்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். கோவிலுக்கு வெளியே நின்றாவது சிவனைத் தரிசிக்க விட வேண்டும் என்று கெஞ்சி மன்றாடி அனுமதி பெற்றார்.

குறுக்கேயிருந்த நந்தி சிலையானது சிவபெருமா-னின் உருவச் சிலையை மறைக்கவே, சிவனைத் தரிசிக்க இயலாது தவித்தார். நந்தனாரின் தவிப்பை அறிந்த சிவபெருமான். நந்தனின் பக்திப் பரவசத்தை மெச்சி, நந்தனுக்கு தன் உருவத்தைத் தெரிவிக்க நந்தியை விலக்கி நந்தன் தன்னை தரிசிக்கும்படி அபயமளித்தாராம். நந்தனும் மனமுருகி சிவனை வழிபட்டுப் பெரும் 'பேறும்' பெற்றானாம்!!!.இப்படி ஒரு வரலாறு பெரிய புராணத்தில் இருக்கிறது. இதனூடாக இந்து மதம் சாதி வித்தியாசம் பார்ப்பதில்லையென்று யாரும் கூறிட முடியுமா? நந்தன் 'பறையன்' என்பதால் கோவிலுக்குள் அந்தணர்கள் அனுமதிக்கவில்லை. அந்தணர்கள் மனிதர்கள்!! அதுவும் சதிகாரர்கள், சண்டாளர்கள், அயோக்கியர்கள் அவர்கள் சாதி வித்தியாசம் பார்த்தார்கள், நந்தனைத் தடுத்து நிறுத்தினார்கள் அது அவர்கள் குண நியாயம்.

www.tamilarangam.net



ஆனால் உலக உயிர்களுக்கெல்லாம் பொதுவானதும், காருண்ய மூர்த்தியாகவும் புனையப்பட்ட கடவுளுமா சாதி வித்தியாசம் பார்க்க வேண்டும் என்று கேட்கிறோம். சிவபெருமான் சாதி வித்தியாசம் பார்ப்பதில்லையென்றால், கோவிலுக்குள் நுழைய மறுத்த அந்தணர்களைத் தண்டித்திருக்கவேண்டும். நந்தனை கோவிலுக்குள் வர அனுமதித்திருக்க வேண்டும். செய்தாரா? அல்லது யார் எவரைக் கொன்றாலும், அழுதாலும், புரண்டாலும், பிறர் பொருட்களை கொள்ளையிட்டாலும், மனித அநியாயங்கள் என என்ன செய்தாலும் அசையாது ஆடாது, பேசாது, பறையாது இப்பவும் கல்லாய்ச் சிலையாய் இருப்பதுபோல் இருந்திருக்க வேண்டும். சரி அதுதான் இல்லை என்றாலும் நந்தனுக்கு முன்னால் சென்று அவன் தரிசிக்க உதவியிருக்க வேண்டும் ஆனால் என்ன புரிந்தார் எமது எம்பெருமான்!!! நந்தன் தன்னை வணங்குவதற்காக தான் இருந்தபடியே ஆடாது, அசையாது இருந்து கொண்டு நந்தனை கோவிலுக்குள்ளே நுழைய விடாது உள்ளே இருந்தபடியே நந்தியை மட்டும் விலக்கி அவனுக்கு தனது தரிசனத்தைக் காட்டினாராம். இவ்வாறு இந்து மதக் கடவுள்களென்றால் அக்கடவுளே சாதிவித்தியாசம் பார்க்கிறது என்பதுதானே பொருள்?

இழிகுலத்தில் பிறந்த நந்தன் கோவிலுக்குள் நுழைந்தால் தீட்டுப்பட்டு விடும் என்றுதான் அக்கடவுளே அவனை வெளியே நிறுத்திக் காட்சி தருகிறார். இது நந்தனின் கதையின் முற்பகுதி. பிற்பகுதி என்னானது? பிறப்பால் 'பறையன்' என்ற ஒரே காரணத்தைக் கூறி, வெளியில் நின்று வணங்கிய நந்தனை கோவிலுக்குள் செல்லக் கூடாதென்று பார்ப்பனர்கள் தடுத்து வந்தனர். நடராஜனை (கல்லுச் சிலையை) அருகில் நின்று காணமுடியாத நந்தன், தவியாய்த் தவித்தார். எப்படியாவது காணவேண்டும் என்று துடியாய்த் துடித்தார். நந்தனின் தொல்லை பொறுக்கமுடியாத பார்ப்பன நரிகள், சதித்திட்டம் தீட்டினர்.

இந்தப் 'பறையனை' கோவிலுக்குள்ளே விட்டால் நாள் தோறும் பல 'பறையர்கள்' உள்ளே வர ஆரம்பித்து விடுவார்கள் என்ற அச்சத்தால், நந்தனை ஒழித்துக்கட்ட முடிவு செய்தனர். கோவிலுக்கு செல்வேண்டுமானால் நாங்கள் வளர்த்த தீயில் மூழ்கியே உள்ளே செல்ல வேண்டும் என்று கட்டளை இட்டனர்!!! அதுவே எம்பெருமானின் விருப்பமும் என்றனர். அத்தோடு 'நந்தா இத்தீயில் மூழ்கி உன் இழி பிறப்பை நீக்கிக் கொண்டு அந்தண வடிவோடு சென்று அம்பலக் கூத்தனை வாழ்த்தி வணங்கு.' என்றும் அந்தணர் கூறினராம்!!

நடராஜப் பெருமானின் பக்தன் தான் என்பதில் அசையாது நம்பிக்கை கொண்டிருந்த நந்தன், தான் நடராஜனை நினைத்து தீயில் இறங்கினால் தனக்கு எதுவும் நேராது எம்பெருமான் தன்னைக் காப்பார் எனும் பாமர நம்பிக்கையில் தீயில் இறங்கினான். உடல், உயிர் கருகி மாண்டுபோனான்.

# நண்பர்களோடு நாலுவார்த்தை .....

=தேவதாசன்=

**எ**ம்மால் வெளியிடப்பட்ட இப்பத்திரிகையை படித்த நண்பர் ஒருவர் நாம் வெளியிட்டுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானதெனவும் யாழ்ப்பாணப் பகுதியில் இப்போது சாதிகள் பேசப்படுவதில்லையெனவும், தமிழீழம் கேட்டவர்கள் எல்லோரும் வெளிநாடுகளுக்கு சென்று விடவும் இல்லை எனவும் தனது விமர்சனத்தை வெளியிட்டார்.

நண்பனே! இப்போது யாழ்ப்பாணப் பகுதியில் மட்டுமன்றி தமிழர்வாழும் அனைத்து பிரதேசங்களிலும் சாதி மட்டுமல்ல வேறு எதையுமே பேசமுடியாது. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், ஜனநாயகம், மனிதநேயம் அனைத்தும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு, உண்பதற்கு மட்டுமே வாய்திறக்கும் நிலைதான் உள்ளது. மேலும் சாதிப்பிரச்சனையென்பது மௌனம் காப்பதன் மூலமோ, மறைத்துவைத்திருப்பதன் மூலமோ தீர்க்கக் கூடியதொன்றல்ல. தமிழ் சிங்களப் பிரச்சனை போன்று 60 வருடப் பிரச்சனையல்ல. மாறாக சாதிப்பிரச்சனை 600 வருடத்திற்கு (யாழ்ப்பாணத்தில்) மேற்பட்ட பிரச்சனை. சாதியம் என்பது இந்துத்துவத்தின் வர்ணங்களில் இருந்து உருவானது. தமிழர் பிரச்சனையோ ஆங்கிலேயன் ஆட்சிக்கு பின்னர் தமிழ் மேலாதிக்க அதிகார வர்க்கத்துக்கும் சிங்கள மேலாதிக்க அதிகார வர்க்கத்திற்கும் ஏற்பட்ட இழுபறியே பின்னாளில் தமிழீழப் பிரகடனமாக மாறியது.

குறிப்பாக 1977 வரை இலங்கை முழுவதும் அரச நிர்வாகத்தை கட்டியாண்டவர்கள் யாழ் மேலாதிக்க சமூகத்தினராகவே இருந்திருக்கின்றனர். ஆனால் மறுபுறம் தமிழ் மக்களில் உள்ள ஒருபகு-தியினரை சாதிய ரீதியாக மிகவும் கொடுமைக்கு உட்படுத்தியிருக்கின்றனர். தலித் மக்களின் உணர்வின் பாலோ பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் உணர்வின்பாலோ, கூலித்தொழிலாளர்கள், விவசாயிகளின் உணர்வின் பாலோ தீர்மானிக்கப்படாமல் மேல்தட்டுவர்க்கம் தனது நலன் சார்ந்து தமிழர் பிரச்சனைகளைக் கையாண்டு தமிழீழமே தீர்வாக முன்வைத்தனர். எந்தவர்க்கம் தமிழீழம் கேட்டனரோ அதேவர்க்கம் போராட்டத் தணலுக்குள் தாக்குப் பிடிக்க முடியாமல் வசதிபடைத்த நாடுகளுக்குள் ஓடிச்சென்று பாதுகாப்போடும் பல வசதிகளோடும் உல்லாசமாக வாழ்ந்து கொண்டு பணங்களை அள்ளிக்கொடுத்து போரை ஊக்குவிக்கின்றனர். மேலும் சாதி அமைப்புத்

www.tamilarangam.net



தகர்வுக்காக யாரேனும் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளனரா? மாறாக கலாச்சாரம் எனும் பெயரில் இந்துத்துவத்தை வளர்ப்பதிலும் அதை பலப்படுத்துவதிலுமே அதிக அக்கறை செலுத்துகின்றனர். உயர்சாதியினர் எனச் சொல்லப்படுபவர்கள் கள் இறக்க ஆரம்பித்து விட்டார்களா? கடலிலே சென்று மீன்பிடிக்கிறாகளா? சலூன் திறந்து தலைமுடிவெட்டுகிறார்களா? மரணவீடுகளுக்கு மேளம் அடிக்க ஆரம்பித்துவிட்டார்களா? அல்லது தலித்துகள் பூசாரியாகிவிட்டார்களா? இலங்கையில் மட்டும் அன்றி புலம்பெயர் நாடுகளிலும் ஆங்காங்கே இடம்பெறும் காதல் சாதி கலப்பு திருமணங்களையே அங்கீகரிக்க மறுக்கின்ற நிலையைத்தான் நாம் பார்க்கக் கூடியதாக உள்ளது.

தமிழீழக் கனவோடு வாழும் பலர் தமிழ் சினிமா ரசிகர்களைப் போலவே தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் ரசித்துக்கொண்டு இருக்கின்றனர். சிங்கள அரசிடம் இருந்து தனி அரசை அமைப்பதன் மூலமோ அல்லது தனிமாவட்ட நிர்வாகத்தை அமைப்பதன் மூலமோ சாதிப் பிரச்சனையை தீர்த்துவிட முடியாது.

தலித் மக்களுடைய அரசியல், கல்வி, பொருளாதார வளர்சியை உறுதி செய்யக்கூடிய சட்ட அமுலாக்கல் கொண்டுவரப்பட்டு அதை நேர்மையுடன் செயற்படுத்துவதை விடுத்து வெறும் வார்த்தை ஜாலங்களாலோ மௌனமான புன்னகையினாலோ இப்பிரச்சினையை நாம் தீர்வுக்கு கொண்டுவர முடியாது.

எது தோழமை இணையத்தளம்
"தூ....."
Www.thuuuu.canalblog.com

# நேற்று...! இன்று...! நாளை...!

< அரவிந் >

**( இக்குறிப்பு பிரான்சிலுள்ள மொழிபெயர்ப்பாளர்க்குக் கிடைத்த புகலிட அனுபவம் )**

இந்திய கீழ் கண்டத்தைவிட்டு வெளியேறியவுடன் சாதி வத்தியாசங்கள் மறைந்து சமத்துவம் காணலாம் என்ற பிரமை என்னிடம் இருந்தது. ஐரோப்பா, அமேரிக்கா போன்ற தேசங்களின் பெயர்களை கேட்கும்போதோ, உச்சரிக்கும் போதோ இவ்வாறான பிரமை எல்லோருக்கும் ஏற்படலாம் என்ற கருத்தும் என்னுள் நிதர்சனமாகவே உதயமாகின்றது. ஆனால் பாரீஸ், லன்டன் போன்ற மாநகரங்களில் வாழும் தமிழர்களின் வாழ்கை நடைமுறைகளை அவதானிக்கும் பட்சத்தில், தமிழ் சமுதாயத்தில் சமத்துவமும், சாதி ஒழிப்பும் இன்னும் நீண்டகால போராட்டத்தின் பிறகே சாத்தியம் என்ற தீர்மாணத்திற்கு வரவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகிறோம்.

பாரீஸில் பிறந்து வளர்ந்த ஒரு தமிழ் பெண். நான் விசாரித்த வரையில் அவளுக்கு சாதி கட்டமைப்பு என்றால் என்ன! அதன் அர்த்தம் என்ன, பொருண்மியம் என்ன என்பதைப்பற்றியெல்லாம் ஏதோ ஒரு மங்கலான புரிதல் கூட இல்லை. ஜாதி கட்டமைப்பு எப்படி ஒரு குடிமகனை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று நிர்ணயிக்க கூடும் என்பதும் அவளுக்கு விளக்கமில்லை. இங்கு பிரான்ஸில் பிறந்து வளர்ந்து கல்வி கற்ற எல்லா பிள்ளைகளைப் போலவே அவளும் பிரஞ்சு தேசத்தின் குடியரசு எல்லோருக்கும் சுதந்தரம் - சமத்துவம்- சகோதரத்துவம் என்ற இலட்சியத்தையே போதிக்கின்றது என்ற பிரக்ஞையிலேயே வாழ்ந்துவந்தாள்.

**ஒரு நாள், கல்லூரியில் ஒரு மாணவன்... ஒரு சந்திப்பு...! ஒரு காதல் உருவாகின்றது.**

சுகிந்தினி, தன் தாயுடன் தன் காதல் கதையை பகிர்ந்து கொண்டாள் பகிர்ந்து கொள்ள முயறிசித்தாள் என்று சொல்வதே சரியாகும் ஏனெனில் செல்லம்மாவிற்கு சுகிந்தினியின் காதல் கதையை கேட்பதற்கு கூச்சமாக இருந்தது, ஆதலால் செவிகொடுக்க மறுத்தாள்.

தன் மகளின் காதலன் யார், அவன் எந்த ஊர் (வேலணை), அவனுக்கு என்ன பெயர்(அமுதன்) என்றெல்லாம் ஆராயதுவங்கிய பெற்றோர்கள், அவனுக்கும் உனக்கும் தொடர்புகள் கூடாது என்று சட்டம்போட்டனர். சுகிந்தினி மறுத்தாள். அன்றிலிருந்து அவள் வாழ்கை நரகமாக மாறியது. இங்கு செல்லக் கூடாது, அங்கு செல்லக் கூடாது, இத்தனை மணிக்குள் வீடு திருபம்ப வேண்டும், என்றெல்லாம் விதிகள் செய்தனர். சுகந்தினிக்கோ 22 வயது. இதைப்போன்ற விடயங்களையெல்லாம் சுயமாக நிர்ணயிக்க கூடிய சுதந்திரம் சட்டத்தில் இருக்கின்றது. நல்ல வேளை, மொபைல் தொலைபேசி இருந்தது. அமுதன் வேலை காரணமாக கோபன்ஹாகன் (டென்மார்க்) சென்றான். ஆறு மாதங்கள் அங்கேயே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அந்த காலகட்டத்தில், சுகிந்தினியை ஒருமுறை இலங்கைக்கும், ஒரு முறை இந்தியவிற்கும் அனுப்பி வைத்தனர். பிறகு தாய் தன் அண்ணன் மகனை மணம் முடிக்க வேண்டும் என்று அடம் பிடித்தாள் இல்லையெனில் தற்கொலை செய்து கொள்வேன் என்று அச்சுறுத்தினாள்.

www.tamilarangam.net



பெற்றோர்களின் விருப்பபடியே திருமணம் நடந்தது. சுகந்தனியின் பெற்றோர்களின் மறுப்புக்கு அஸ்திவாரமாக இருந்தது ஜாதி வித்தியாசம். அமுதன் ஏதோ கீழ் ஜாதியில் பிறந்தவன் என்று அறிந்ததனால்தான் இந்த திருமணத்திற்கு தடைபோட்டார்கள்.

ஆனால் திருமணமான மூன்றாம் நாளே சுகந்தியை காணவில்லை. வீட்டை விட்டு ஓடிவட்டாள். ஒரு சமூக சேவகியிடம் தனக்கு நடந்ததை கூறி, காயப்பட்ட பெண்களுக்கான விடுதி ஒன்றில் தங்கியிருந்தாள். வீட்டில் இருந்தவர்கள் மிரட்டிப்பார்தார்கள். அவளோ போலீசுக்கு அறிவித்துவட்டாள். பெற்றோர்கள் சட்டத்தின் பார்வையில் குற்றவாளியாகிவிட்டனர்.

ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் தாமே தம் ஜோடிகளை தேடிக்கொள்வது வழக்கம். பாரீஸில் பிறந்த சுகந்தினிக்கு அந்த உரிமையை மறுத்தது எவ்வுளவு பெரிய கொடுமை என்பதை நீங்களே நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.

## யார் அகதி ?

**(ராமீகன்)**

**தலித்** கேள்விகள் தமிழா் படைப்பிலக்கியத்தின் “நவீன கருப்பொருளாக” சில ஆண்டுகளின் முன்னா் இருந்தன. பெயா் தேட இந்தக் கேள்விகள் தலித் அல்லாதோா் பலரிற்கு இருந்தது என்பது பொய்யா? தலித் அல்லாதோா் தலித் கேள்விகளைத் தொடக்கூடாது என வாதாடுதல் தப்பு. ஆனால் ஒரு பக்கம் தலித் இலக்கியம் எழுதி மறுபக்கம் சாதித்துவத்தை பல படைப்பாளிகள் தியானம் செய்தனா்.

**தமிழனின் சமூக இயக்கத்தினது மூலம் போலித்துவத்தில் கருக்கட்டியது என்பதையே இந்தப் படைப்பாளிகள் காட்டுகின்றனா். ஆனால் தலித் கேள்விகள் இன்று கவனத்துக்கு எடுக்கப்படும் கேள்விகளாகியுள்ளன. குறிப்பாகத் தமிழ்நாட்டில் நிறையப் புத்திஜீவிகள் தலித் போராளிகளாகியுள்ளனா். பல மாற்றங்கள் தொடங்கியுள்ளன. இந்த மாற்றம் இங்கும் தேவை. ஆம் புகலிடத்திலும். ஆனால் பாதுகாப்புத் தேடி இங்கு அகதிகளாக வந்தோா், தமது சாதித் தடிப்புகளோடும் வந்தனா் என்பது வெட்கப்படவேண்டியது.எவன் அகதியோ அவனிடம் சாதித் தடிப்பு இருக்கக்கூடாது. சாதி பாா்ப்போா் அனைவரும் போலி**

# காதுக்கெட்டியவை

**1,** **நாவலா்** தந்த சைவமும் தமிழும் தலைத்தோங்க, அதோடு சாதியும் சோ்ந்து ஓங்க, கல்வியும் செல்வமும் வீரமும் விளைந்த பூமியாம் யாழ்ப்பாணத்தில் இன்னும்... இன்னும்... சாதி வெறியா்களின் அற்பத்தனமும், அடாவடித்தனமும் விருட்சமாக வளா்கிறது. 1995 ஆண்டு யாழ்ப்பாணத்தவா்கள் வன்னிக்கு இடம்பெயா்க்கப்பட்டபோது சாவகச்சேரியிலும் கொடிகாமத்திலும் ஒண்டுக்கு இருக்கக் கூட இடமின்றி, தாகத்துக்கு தண்ணீா் குடிக்க அனுமதியின்றி உயா்சாதியினரால் அனுபவித்த கொடுமைகள் சொல்லி மாளாது. சிலா் சொல்லலாம் அது அப்போது இப்போது இல்லையென. இப்போதுதான் இந்த ஆண்டில்தான் இன்னும் பல கொடுமைகள் நடக்கின்றன. யாழ்ப்பாணக் குடா நாட்டின் காரைநகா் கிராமத்தில் தலித்துக்கள் வழிபடும் இந்து ஆலயத்துக்கு பூசநேரம் பாா்த்து மின்சாரம் திட்டமிட்டு துண்டிக்கப்படுகிறது. கேட்பாரும் யாரும் இல்லை. பாா்ப்பாரும் யாரும் இல்லை.

2, **கைதடியில்** உள்ள இந்து ஆலயத்தில் சகல திருவிழாக்களுக்கும் அன்னதானம் வழங்குவது இப்போது வழக்கத்தில் உள்ளது (வெளிநாட்டு காசு). சகல திருவிழாக்களுக்கும் அன்னதானம் சமைக்கின்ற குழுவினா் தலித்துக்களின் திருவிழாவுக்கு சமையல் செய்ய மறுத்துவிட்னா். இதனால் தலித்துக்களே தங்கள் திருவிழாவுக்கு சமையல் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டு பல்சுவை உணவையும் சமைத்தனா். ஆனால் சாப்பிடுவதற்கு உயா்சாதியினா் யாரும் வரவில்லை. முடிந்தவரை தலித்துக்களே சாப்பிட்டு மீதியை குழிதோண்டிப் புதைத்தனா். சைவமும் தமிழும் சாதியும் தளைத்தோங்கட்டும்.

www.tamilarangam.net



**எம்மிடம் இருப்பவை சமூகத்தின் மீதான கேள்விக் கணைகள். எமக்குக் கிடைத்ததோ கேள்வித் துணைகள். ஆம் எமது 'வடுக்களை' காண்பித்த முதற் 'கணமே' எம்மீதும், எமது பத்திரிகை மீதும் அக்கறை கொண்ட மனங்களின் கேள்வித் துணைகள்.**

***« வடு » பத்திரிகையைப் பார்த்தோம், உங்கள் முயற்சிக்கு வாழ்த்துக்கள், இலங்கைச் சிறுபான்மைத் தமிழருக்குத் தெரியாத 'தலித்' என்னும் சொல் நீங்கள் பாவிக்கின்றீர்கள், அது ஏன்? தேவையா?***

***-சுபத்திரன் - கனடா***

உங்கள் வாழ்த்துக்களுக்கு நன்றி, இன்று பலராலும் எம்மை நோக்கி கேட்கப்படுகின்ற ஒரு கேள்வி இது. 'தெரியாத 'தலித்' எனும் சொல்' என்று குறிப்பிடடிருக்கிறீர்கள். நம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட அனைத்துமே ஆரம்பத்தில் தெரியாதிருந்ததுதானே, தேடுதல்தானே அதனைச் சாத்தியப்படுத்துகிறது. நிற்க, இது ஒரு மராட்டியச் சொல், அமரிக்க கறுப்பின அடிமைகள் காலத்தைய ஆங்கிலச் சொல் இதன் மூலமெனவும் அறியப்படுகிறது. எது எப்படியிருப்பினும் சாதியால் ஒடுக்கப்பட்ட எம்மக்கள் பிரச்சனைகளைச் சர்வதேச மயப்படுத்துவதற்கு பரவலாக எல்லோராலும் இன்று அறியப்படுகின்ற 'தலித்' எனும் சொல் மிகவும் வசதியானது. மேலும் புதிதாக ஒரு சொல்லும் அதன் உட்பொருளும் அறிய வருவது எம் மொழிக்கு கேடா என்ன? சோலிசம், கம்யுனிசம், இந்துத்துவம் என்பன வெல்லாம் இப்படி வந்தவைதானே. மேலும், கடந்த முதலாவது 'வடு' இதழில் இதற்குரிய விளக்கம் தோழர் டொமினிக்ஜீவா அவர்களுடைய கூற்றிலும் உள்ளது.

***இலங்கையில் சாதியால் ஒடுக்கப்பட்டவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளுக்கு வந்ததும் அதை மறைத்து வாழ்கிறார்கள் சரியா? பிழையா?***

***-பாபு - பிரான்ஸ்***

இக்கேள்வியும், அதில் தொக்கி நிற்கும் உள்ளார்ந்த அர்த்தமும் 'சாதிப்பிளவுகள் இல்லாது போய்க்கொண்டிருக்கின்றனவென்று துணிந்து பொய் பேசுபவர்களை அம்பலப்படுத்துவதுடன் தமிழ்ச் சாதிய சமூகத்தின் முகத்தினை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. நிலவும் சாதிப் படிமுறைகளின் தொடர்ச்சியான பேணுதலும், அதனது மாறா இருப்பினை அவாவி நிற்கும் மேல்சாதிய மனோபாவம்தான் ஒவ்வொருத்தன் நெற்றியிலும் அவனது சாதிப்பெயரினை சூட்சுமமாகப் பொறித்துப் பார்த்து தனக்குள் கூத்தாடிக் கொள்கிறது. அதனது அப்பட்டமான வெளிப்பாடுதான். 'தம்பி ஊரில எவடம்' என்கின்ற எசகுபிசகான கேள்வியில் ஆரம்பிக்கும் அவலட்சணமான வாயாடல்கள். பதில் தெரியாத விக்கிரமாதித்தனின் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் என்பதைப்போல இவர்களுக்கு ஏதோவொருவகையில் தம்மோடு பழகநேர்ந்த அடுத்தவனின் சாதியினைத் தெரிந்துகொள்ளாது விட்டால் மண்டையே வெடித்துவிடும்.

அதனைத் தெரிந்துகொள்வதில் அவர்கள் நாடும் அநாகரிக வழிமுறைகள் பற்றிச் செல்லவும் வேண்டாம். பார்த்திருப்பீர்கள். இதுதான் யதார்த்தம், இது புரியாத கண்ணை மூடிய பூனைகள் தான். இப்பவெல்லாம் எங்கேயிருக்குது சாதி? என்று எகத்தாளமாகக் கேட்டு முழுப்பூசனிக்காயினைச் சோற்றில் மறைக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு தாங்கள் உயர்சாதி என்ற உள்ளூரக் குடிகொண்ட திமிரும், நாங்கள் எல்லாம் சாதி பார்க்கிறதில்லை, எல்லாரோடையும் பழகிற நாங்கள்தானே, என்கின்ற பசப்பும் இயல்பாய் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் அவர்களது வேடங்கள் எல்லாம் அவர்களது பிள்ளைகளின் காதல், அவர்களது கல்யாணம் என்று வரும் போது அப்பட்டமாக வெளுத்துவிடும், இந்தச் சூழ்நிலையில் புலம் பெயர்ந்த சூழலிலாவது இந்தச் சாதி என்கின்ற சனியன் பிடிக்காமல் கொஞ்சம் 'கௌரவமாக' வாழுவமே என்று நினைக்கின்றவர்கள் இயல்பாக தம் சாதியை மறைக்கத்தான் செய்வார்கள், அதிலென்ன தப்பு?

***நீங்கள் பெரியார் பற்றி எழுதியுள்ளீர்கள். அது புரியவில்லை. பெரியார் திரைப்படம் பார்த்துதபின்தான் பெரியார் எவ்வளவு அறிவாளி என்பது தெரிகிறது. பெரியார் திரைப்படம் முற்றிலும் உண்மைக்கதையா?***

***-அன்ரன் - அவுஸ்ரேலியா***

பெரியாரைப் புரிந்துகொள்ளவேண்டும் என்பதில் நீங்கள் காட்டும் அக்கறை பாராட்டத்தக்கது. வெறும் கனவுலகச் சினிமா கதாநாயகர்களின் அந்தரங்கங்களோடு கட்டியழும் ரசிகர் சிகாமணிகளில் எத்தனைபேர் பெரியார் திரைப்படம் பார்த்திருப்பார்கள். அதைப்பற்றி இப்படி சிந்தித்து இருப்பார்கள். உங்களைப் போன்றவர்கள் இதில் காட்டும் ஆர்வம் எம் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையினை உறுதரி செய்கிறது. பெரியார் திரைப்படம் முற்றிலும் உண்மையென்பதைவிட முழுமையான உண்மையில் ஒரு துளி என்பதுதான் மிகப்பொருத்தம். பெரியாரின் வாழ்வு மிகப்பெரியது. முன்மாதிரியானது. அவரை அறிவாளி என்பதை விட ➞

www.tamilarangam.net



மிகப்பெரிய மானுடன், புரட்சியாளன் என்பதற்கு மேல் என்னென்ன வார்த்தைகள் உள்ளனவோ அதனைக் கொண்டழைப்பதுதான் பொருத்தமானது. அப்படிப்பட்டவரை தீவிர வாசகர்களும் புத்திஜீகளும் மாத்திரமே இன்றைய தலைமுறையில் நினைவில் வைத்திருக்க அவரைப்பற்றி ஒரு சித்திரத்தினை சாதாரணமானவர்களிடத்தேயும் கொண்டு செல்லவேண்டும் என்கின்ற காலத்தின் கட்டாயத்தில் அதன் அவசியத்தின் அதனை ஒரு திரைப்படமாக்கித் தந்த இயக்குனர் ஞான ராஜசேகர் அவர்கட்கு ஒடுக்கப்பட்ட அனைத்துமக்களும் நன்றி கூற கடமைப்பட்டவர்கள். இத்திரைப்படம் எல்லோரையும் பெரியார் பற்றிய மேலதிகமான தேடுதலைத் தூண்டுகிறது என்பதே அதனது தார்மீக வெற்றி.

ஆனால் பாருங்கள் இந்தியத் தமிழ் சினிமாச் சூழல் சிவாஜி திரைப்படம் எத்தனை கோடிகளில் வியாபாரமானது என சாதாரண ரசிகர்களையும் பட்டிமன்றம் நடத்தும் அளவிற்கு கொண்டுசென்றுள்ளது. யாதார்த்த உண்மைகளை மறைத்து மக்கள் காதுகளில் பூச்சுத்தும் கைங்கரியத்தினை அத்திரைப்படத்தின் மூலவர்கள் மூவரும் செய்திருக்கிறார்கள் (ஏ.வி.எம், சங்கர், ரஜனி). எனவே பெரியார் திரைப்படம் உண்மைக் கதையென்பதும் அதன் உண்மைகள் இன்னும் உள்ளன என்பதும் அதனைத் தேடி வாசித்தல் ஒரு பெரும் சமூக மாற்றத்திற்கான வழியென்பதும் உண்மையிலும் உண்மையான ஒன்று.




« ஒழுக்கம் பண்பு போன்ற பண்புகளால் புறக்கணிக்கப்பட்டு வறுமையிலும் துன்பத்திலுமே வாழ்க்கை நடாத்தும் கோடானு கோடி மக்களின் சுக துக்கங்களைப் புரிந்துகொண்டு அவர்களின் போராட்டமயமான வாழ்வில் மின்னல் போல் தோன்றி மறையும் மனித உணர்வுகளுக்கு முழுவடிவம் கொடுக்கும் அதே வேளையில், அவர்களை இன் நிலைக்கு தள்ளிவிட்ட சுகபோக வர்க்கத்தினரின் கோரத்திரையை கிளித்தெறிந்து அம்பலப்படுத்துவது மனசாட்சியுள்ள எழுத்தாளனின் கடமையாகும். »


**டானியல் - 1963**

### முதற்பக்கத் தொடர்ச்சி

தோழர் யோகரடணம் அவர்களின் குறிப்புகள் வரும் ‘வடு’ இதழிலிருந்து பதிவு செய்கிறோம்.

தோழர் யோகரட்ணம் அவர்கள் இடது சாரி இயக்க அனுபவங்களிலும், அவ்வியக்த்தின் சாதி ஒழிப்புப் போராட்டப் பணிகளிலும் கலந்து கொண்டவர். அவர் மூலமாக தலித் சமூகங்களுக்கு இழைக்கப்பட்ட சமூகக்-கொடுமைகளை நாம் கேட்டு அறிந்திருக்கிறோம்.

தலித் சமூகங்களுக்கு உயர்சாதியினரால் மேற்கொள்ளப்பட்ட சமூகக் கொடுமைகளை தோழர் டானியலின் இலக்கியப் படைப்பாக்கத்தின் மூலமாக நாம் அறிந்ததைப் போலவே தொழர் யோகரட்ண மூலமாகவும் ‘வடு’ வாசகர்கள் பல உண்மைகளை அறிந்து கொள்ளலாம்.



**இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் ( பிரான்ஸ் ) சார்பில் வெளிவரும் மாதாந்த பிரசுரம்**